**ஊடக அழைப்பு**

வணக்கம்!

தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பள்ளிகளில்மார்ச் 20 ஆம்தேதி, ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10 மணி முதல் 1 மணி வரை பெற்றோர்களுக்கான கூட்டம் நடைபெற இருக்கிறது. பள்ளி மேலாண்மைக் குழு குறித்து பெற்றோர்கள் அறிந்துகொள்வதற்காக இக்கூட்டங்கள் பள்ளிகளில் நடைபெறவிருக்கின்றன.

தமிழ்நாடு முதல்வர் மாண்புமிகு திரு. முக.ஸ்டாலின் அவர்கள் பெற்றோர்களை பள்ளி மேலாண்மைக் குழுவில் இணையுமாறு கோரி அழைப்புவிடுத்திருக்கிறார்.

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் அலைபேசி மூலமாக 53,15,114 பெற்றோருக்கு தன் குரல் பதிவின் மூலம் கூட்டத்திற்கு அழைத்திருக்கிறார்.

தமிழ்நாட்டின் பள்ளிக் கல்வி வரலாற்றில் இது ஒரு மைல்கல். முன்னெப்போதும் இல்லாத வகையில் மாநிலம் முழுவதிலும் உள்ள அரசுப் பள்ளி மாணவர்களின் பெற்றோர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொள்கின்றனர்.

அரசுப் பள்ளிகளில் நடத்தப்படும் இக்கூட்டங்களுக்கு தங்கள் நிறுவனம் சார்பில் செய்தியாளர்களை அனுப்பி இது குறித்து செய்தி சேகரித்து தங்கள் ஊடகத்தில் வெளியிடுமாறு வேண்டுகிறோம்.

நன்றி!